Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 38 of 2025**

Deposition of P.W. 19 (L.W. 20 ) } Prosecution } Defence }

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திரு.சுப்பிரமணியம் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 08.06.2026.

6, 7 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பாலக்கோடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024ம் வருடம் மாரண்டஅள்ளி வட்ட ஆய்வாளராக பணியில் இருந்த போது மாரண்டஅள்ளி காவல் நிலைய குற்ற எண் 98/2024 சட்டபிரிவு 147, 148, 294(பி), 324 மற்றும் 307 இதச படியான வழக்கு கோப்பினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். அன்றைய தினம்

12.30மணி சுமாருக்கு இவ்வழக்கின் சம்பவ இடத்தை சாட்சிகள் துரை மற்றும் வெங்கடேசன் ஆகியோர் முன் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் **அ.சா.ஆ.27** மற்றும் **அ.சா.ஆ.28** ஆகும். பின்னர் சம்பவ இடத்தில் எதிரிகள் விட்டு சென்ற TN 24 S 6935 மற்றும் TN 24 AR 5449 ஆகிய பதிவு எண்கள் கொண்ட இன்டிகோ கார் மற்றும் தோஸ்த் (அசோக் லைலேண்ட்) ஆகியன முறையே அதே சாட்சிகள் முன்னிலையில் **அ.சா.ஆ.29 மற்றும் அ.சா.ஆ.30** கைப்பற்றுதல் மகஜர்களில் கைப்பற்றினேன். வழக்கு சொத்துக்களை தனி தனி படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அவை **அ.சா.ஆ.31 மற்றும் அ.சா.ஆ.32 ஆகும்.** சி.பி.எண் 10/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. அந்த இண்டிகோ கார் **அ.சா.பொ.1, தோஸ்த் வாகனம் அ.சா.பொ.2** ஆகும். மேலும் சம்பவ இடத்தில் ஒபோ புளூகலர் செல்போன் IME No. 868987057725177 ல் 9444425498 என்ற சிம்முடன் கைப்பற்றி விசாரணை செய்ததில், அது 1ம் எதிரி கோவிந்தசாமி என்பவர் பயன்படுத்தி வந்த செல்போன் என்பதை தெரிந்து கொண்டேன், அதை அதே சாட்சிகள் முன்பு **அ.சா.ஆ.33** கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, **அ.சா.ஆ.34** படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த செல்போன் **அ.சா.பொ.3** ஆகும். பின்னர் சம்பவ இடத்தில் இவ்வழக்கின் வாதி கோவிந்தன் ஓட்டி வந்த TN 29 L 4664 பதிவு எண் டிவிஎஸ் விக்டர் வாகனத்தை அதே சாட்சிகள் **அ.சா.ஆ.35** கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி,

**அ.சா.ஆ.36** படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். அந்த விக்டா் வாகனம் **அ.சா.பொ.4** ஆகும். பின்னா் இவ்வழக்கின் சாட்சிகளான கோவிந்தன், முருகன், கிருஷ்ணன், துளசி, பெரியசாமி, துரை மற்றும் வெங்கடேசன் ஆகியோரை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னா் இவ்வழக்கில் எனது விசாரணையிலிருந்தும். சாட்சிகளின் விசாரணையிலிருந்து வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடிய போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 12.05.2024ம் தேதி இரவு 07.15மணிக்கு பென்னாகரம் இந்தியன் வங்கி எதிரே உள்ள புளிய மரத்தடியில் இவ்வழக்கின் **5**ம் எதிரி அரவிந் நின்று கொண்டிருந்தவரை தகலாளி அடையாளம் காட்ட எதிரியை கைது செய்து இவ்வழக்கிற்கு பயன்படுத்திய, TN 24 K 8655 என்ற பஜாஜ் இரு சக்கர வாகனத்தை கைப்பற்றினேன். மேற்படி எதிரி அரவிந்தை விசாரிக்க எவ்வித அச்சுறுத்தல் இன்றி, ஆசை வார்த்தை இல்லாமலம் என்னுடன் அழைத்து செல்ல ரவி மற்றும் நாகராஜ் முன்னிலையில் விசாரிக்க, எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சி மற்றும் எதிரியிடம் கையெழுத்து பெற்றேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூல அடிப்படையில் எதிரி ஆஜர்படுத்திய மேற்படி வாகனம் மற்றும் சம்பவத்திற்கு அவர் பயன்படுத்திய தொண்ணை ஆகியவற்றை அதே சாட்சிகள்

முன்னிலையில **அ.சா.ஆ.37** கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, **அ.சா.ஆ.38** படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த பஜாஜ் வாகனம் **அ.சா.பொ.5** மற்றும் தொண்ணை **அ.சா.பொ.6**ஆகும். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தன்னை அழைத்து சென்றால் தாங்கள் திட்டம் போட்டு கோவிந்தனை கொலை செய்ய வாகனங்களில் மோதவிட்டு விபத்து ஏற்படுத்திய இடத்தை அடையாளம் காட்டுவதாக கூறினார். அதன் அடிப்படையில் எதிரி மற்றும் சாட்சிகளுடன் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு நிலையம் வந்து மேற்படி எதிரியை கைது செய்த விவரத்தை உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து, எதிரியை தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன்.

மேலும் இவ்வழக்கின் மற்ற எதிரிகளை பிடிப்பதற்காக காவல் உதவி ஆய்வாளர் ஜீவானந்தம், மு.நி.கா.1128 ராகுல்கண்ணன், மு.நி.கா.325 சம்பத் ஆகியோர்களை ந.க.எண்.7/2024 படி தனி அலுவலாக நியமித்தேன். தொடர் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் 13.05.2024ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் ஜீவானந்தத்திற்கு கிடைத்த ரகசிய தகவல் படி திருவண்ணாமலை மாவட்டம், தானிப்பாடி பஸ் நிலையம் அருகே தகவாலாளியுடன் சென்ற போது இவ்வழக்கில் கண்ட 1ம் எதிரி கோவிந்தசாமி, 3ம் எதிரி ரவி ஆகியோர்களை அடையாளம் காட்ட அவர்களை 13.00மணி சுமாருக்கு கைதுக்கான காரணத்தை கூறி, தனிப்படையின் கைது

செய்து இவ்வழக்கிற்கு பயன்படுத்திய 3ம் எதிரி பயன்படுத்திய எடுத்து ஆஜர் செய்த ஒபோ A79 5G செல் நம்பர் 8148892114 என்ற செல்போனை அங்கு சென்றிருந்த ராகுல்கண்ணன் மற்றும் சம்பத் ஆகியோர் முன்னிலையில் 13.30 மணி சுமாருக்கு கைப்பற்றினார். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் அன்றைறய தினமே 16.00மணி சுமாருக்கு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி எதிரிகள் இருவரையும் என் வசம் பெற்று விசாரிக்க 1ம் எதிரி சொல்லி வரவழைக்கப்பட்ட சாட்சிகளான ராஜி மற்றும் வேல்முருகன் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எந்தவித அச்சுறுத்தலும் இன்றி, ஆசை வார்த்தை இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். மேற்படி எதிரி தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் அ.சா.1ஐ கொலை செய்ய வேண்டி தாக்க பயன்படுத்திய கத்தியை மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்றும், மேலும் கோவிந்தனை கொலை செய்ய திட்டம் போட்டு, வாகனங்களை மோதவிட்ட இடத்தையும் அடையாளம் காட்டுவதாக சொன்னார். பின்னர் எதிரி ரவி என்பவரை விசாரிக்க அவரும் எந்தவித அச்சுறுத்தலும் இன்றி, ஆசை வார்த்தை இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து எதிரி மற்றும் சாட்சிகளிடம்

கையொப்பம் பெற்றேன். மேற்படி எதிரி தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் அ.சா.1ஐ கொலை செய்ய வேண்டி வாகனங்களை மோதவிட்ட இடத்தையும் அடையாளம் காட்டுவதாக சொன்னார். பின்னர் அன்று இரவு நேரமாகி விட்டதால், அவர்களுக்கு ஓய்வு கொடுத்து மறுநாள் 14.05.2024ம் தேதி காலை 08.45 மணி யளவில், 1, 3 எதிரிகளை மேற்படி சாட்சிகளுடன் அழைத்து சென்ற போது, மேற்படி எதிரிகள் சம்பவ இடத்தை அடையாளம் காட்டியும், 1ம் எதிரி இவ்வழக்கிற்கு பயன்படுத்திய சுமார் 46 செமீ நீளமுள்ள இரும்பு கத்தியை பொப்பிடி - பாலக்கோடு செல்லும் ரோடில் பூமரத்துபள்ளம் தரைபாலத்தின் அடியில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜா் செய்தார். அதனை **அ.சா.ஆ.39** கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். மேற்படி கத்தியை **அ.சா.ஆ.40** படிவம் 91 படி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த கத்தி **அ.சா.பொ.7** ஆகும். எதிரிகளை முறைபடி நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன். பின்னா் சாட்சிகள் எம்.ஜி.ரவி, நாகராஜ், ஜீவானந்தம், ராகுல்கண்ணன், சம்பத், ராஜீ மற்றும் வேல்முருகனை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தொடர் விசாரணை மேற்கொண்டு 18.05.2024ம் தேதி இவ்வழக்கின் சாட்சிகள் ஹீரிஸ், எல்லப்பன் மற்றும் சுப்பிரமணி ஆகியோரை விசாரித்து தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.01.2024ம் தேதி இவ்வழக்கில் இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 கோவிந்தனுக்கு

சிகிக்சை அளித்த மருத்துவர் வசந்தராஜை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ.25 காயசச்சான்று பெற்றேன். பின்னர் இவ்வழக்கின் 2ம் எதிரி கார்த்திக், 4ம் எதிரி கோவிந்தராஜ், 6ம் எதிரி சாந்தகுமார் மற்றும் 7ம் எதிரி கோபி ஆகியோர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதை தெரிந்து கொண்டேன். பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் முருகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர் எனது விசாரணை முடித்து குற்ற அரசு வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்றும், பின் 27.01.2024 தேதி மேற்படி எதிரிகள் மீது சட்டப்பிரிவு 147, 148, 294(பி), 324, 307 இதசவிலிருந்து சட்டபிரிவு 120(பி), 147, 148, 294(பி), 307 இதச படி சட்டபிரிவு மாறுதல் செய்து, அதற்கான அறிக்கை **அ.சா.ஆ.41** படி புலன் விசாரணையை முடித்து, காவல் அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>1, 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.ஆ.26 முதல் தகவல் அறிக்கையில் மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைக்கப்பட்ட நேரம் 12.05.2024ம் தேதி பகல் 10.00 மணிக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த அ.சா.18 முருகன், ஏ.ஆர் காப்பியை பெற்று அதன் அடிப்படையில் பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.18 தனது வாக்குமூலத்தில் கோவிந்தன் என்பவர் சாலை விபத்தில்

காயம்பட்டு, சிகிச்சையில் இருந்ததாக தகவல் கிடைத்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1, தனது புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ல் முகம் மற்றும் தலை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். 4ம் எதிரி கோவிந்தராஜ் உடல்நிலையை பொறுத்து எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால், எனது விசாரணையில் குறிப்பாக தெரியவரவில்லை. 4ம் எதிரி 100 சதவீதம் கண்பார்வை இழந்த நபர் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் 4ம் எதிரி மீது காவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால், சம்பவ இடமானது எனது ஆள்வரைக்குட்பட்ட இடம் என்பதாலும், அந்த இடம் பற்றி எனக்கு நல்ல பரிட்சயம் இருந்ததாலும், புகாரில் சொல்லப்பட்ட சங்கதிகளை வைத்து சம்பவ இடத்தை அடையாளம் கண்டு கொண்டேன். அந்த இடத்தில் வழக்கு சொத்துக்களும் அங்கேயே இருந்ததால் அதை தெரிந்து கொண்டேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரமானது அதிகாலை 04.30மணி என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், புலன் விசாரணைக்காக அன்றைய தினம் 12.30மணியளவில் நான் சென்ற போது சம்பவ இடமானது பாதுகாக்கப்பட்ட நிலையில் ஒதுக்கப்பட்டு இருந்ததா என்றால், சம்பவ இடமானது கிராமபுற ரோடு என்பதாலும், ரோடின் ஓரமாக இருந்ததாலும் சம்பவ இடமானது

பாதுகாப்பான நிலையில் இருந்தது. சம்பவ இடம் ஜனநடமாட்டம் அதிகம் உள்ள இடமாக உள்ள நிலையில் பொதுமக்களிடம் தனிப்பட்ட முறையில் தகவல் ஏதேனும் வரப்பட்டதா என்றால்,அதிக ஜனநடமாட்டம் இல்லாத இடம் என்பதால் தகவல் எதுவும் பெறபடவில்லை. நான் கூறுவது தவறு என்றும், அது தருமபுரியிலிருந்து பாலக்கோட்டிற்கு செல்லும் பிரதாண சாலை என்றும் சொன்னால் சரியல்ல. தனிப்படை அனுப்பியதற்கான நடைமுறை உத்திரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அது நிர்வாக வசதிக்காக போடப்பட்ட செயல்முறை உத்திரவு ஆகும். ஒரு மாவட்டத்திலிருந்து அடுத்த மாவட்டத்திற்கு காவல் துறையினர் செல்லும் போது அதற்கான செயல்முறை உத்திரவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தான் பிறப்பிக்கப்பட கூடும் என்றால் சரியல்ல. பிற மாநிலத்திற்கு சென்றால் தான் அவ்வாறு பெற வேண்டும். வேறு காவல் நிலைய ஆள்வரைக்கு செல்லும் போது அந்த காவல் நிலையத்திற்கு முன் தகவல் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. 1, 3 எதிரிகளை 13.05.2024ம் தேதி மதியம் 01.00மணியளவில் கைது செய்யப்பட்டவர்களை, 14.05.2024ம் தேதி மதியம் 02.30மணியளவில் நீதிமன்ற காவலுக்குட்படுத்தியுள்ளது சட்ட முரணானது என்றால் சரியல்ல. கைதுக்கு பிறகு காவல் நிலையம் அழைத்து வர ஆகும் காலம் நேரம் நீக்கம் செய்யப்பட்டு தான், உரிய நேரத்தில் தான் நீதிமன்ற காவலுக்குட்படுத்தார்.

அ.சா.பொ.7 இரும்பு கத்தியின் அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கத்தி என்பது நேரகாவும், கொடுவால் என்பது வளைந்துள்ள அமைப்புகள் கொண்டதாகும் என்றால் சரிதான்.இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வாகனங்களின் எஞ்சீன் எண், சேசஸ் எண்ணை கைப்பற்றுதல் மகஜர்களில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். படிவம் 91ல் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் அவற்றை சேகரிப்பதற்கான சூழ்நிலை இல்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைப்பற்றப்பட்டிருந்தால் அவற்றை சேகரிக்க கூடிய வாய்ப்பிருந்திருக்கும் என்றும், அவ்வாறு இல்லை என்பதால் தான் அவை குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சம்பந்தப்பட்ட தொலைபேசி எண்கள் யார் பெயரில் பெறப்பட்டது என்பதற்கான ஆவணங்களை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் அடிப்பட்டவுடன் அங்கிருந்தவர்களின் உதவியுடன் மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்து செல்லப்பட்டதாக கூறியுள்ள நிலையில், அதற்கு மாறாக அவரது மனைவி மற்றும் மகன் ஆகியோர் அடிப்பட்ட அ.சா.1ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக வாக்குமூலம் உள்ளது என்றால் என்னுடைய விசாரணையின் போது அவ்வாறு தான் கூறியுள்ளனர். சாட்சி எல்லப்பன் தனது சாட்சியத்தில் தோஸ்து வாகனமானது தான் விற்று விட்டதாகவும், அதற்கான முன் தொகையாக ரூபாய் 30ஆயிரம் பெற்று கொண்டதாகவும் கூறியுள்ள

நிலையில், அது குறித்து விசாரணை மேற்கொண்டேனா என்றால், விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதற்கான ஆவணம் எதுவும் இல்லை. அ.சா.16 சுப்பிரமணியின் மகன் தான் 7ம் எதிரி கோபி என்பதை புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அ.சா.16ஆக விசாரணை செய்யப்பட்ட சுப்பிரமணியும், 7ம் எதிரியின் தந்தை சுப்பிரமணியும் வேறு வேறு நபர்கள் என்பதை நான் தெரிந்து கொண்டேன். நான் அவ்வாறு சொல்வது தவறு என்றும், அ.சா.16 சுப்பிரமணி தான் 7ம் எதிரியின் தகப்பனார் என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்திருந்தால் அ.சா.16ன் தகப்பனார் பழனிசாமி என்பதும், அவர் 7ம் எதிரியின் தாத்தா என்பதும் எனக்கு தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் விசாரணை செய்த அ.சா.16 சுப்பிரமணியத்திற்கு ஜெயவேல் மற்றும் சரண்யா என்பவர்கள் தான் பிள்ளைகள் என்றும், 7ம் எதிரி அவரது மகன் இல்லை என்பது தெரிய வந்தது. நிலம் சம்பந்தப்பட்டு ஏற்பட்ட பிரச்சனை காழ்ப்புணர்ச்சியால் அ.சா.1ஐ தாக்கியதாக எனது விசாரணையில் தெரியவந்த நிலையில், அந்த நிலத்திற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த நிலம் சம்பந்தமாக அ.சா.1 மீது கொலை முயற்சி வழக்கும், கொலை வழக்கும் பதிவு செய்யப்பட்டு, கொலை முயற்சி வழக்கில் அவர் குற்றவாளியாக தண்டனைக்குள்ளாகப் பட்டுள்ளார் என்றால் சரிதான். 4ம் எதிரி கண்பார்வை இழந்தவர் என்பதை தெரிந்து கொள்ளாமலும்,

7ம் எதிரியின் தந்தை பெயரை யார் என்று விசாரித்து கொள்ளாத நிலையிலும், இவ்வழக்கில் வாகனத்திற்கான எஞ்சின் நம்பர், சேசஸ் நம்பா் குறிப்பிடாமலும், நிலத்திற்கு சம்பந்தப்பட்ட ஆவணத்தை சமர்பிக்காமலும், மேற்படி வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்றபத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. மற்ற எதிரிகள் தரப்பில் 1, 7க்கான குறுக்கு விசாரணையை ஏற்று கொள்கின்றனர்.

Sd/Tmt.K.R.Jothi,B.A.,B.L.,
Additional District Judge,
Dharmapuri.

.